1971 டிசம்பர் 6]

திரு. என். டென்னிஸ்: சார், தேர்ந்தெடுக்கப்பட்டும், அமர்த்து வதில் காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுத்தபிறகும், வேலை காலி ஏற்பட்டால்தான் ஏற்றுக் கொள்ளப்படும். கண்டக்டருக்கு 18 வயது என்று இருந்ததை, அது போதாது என்று மாற்றி 25 வயது குறைந்தபட்சம் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை 1968-ல் போடப்பட்டது. அந்த வயதுக்கு உட்பட்டவர்கள் நியமிக்கப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நியமிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். தகுதி அடிப்படையில் அரசாங்கத் துறையில் நியமிக்கப் படவேண்டியிருப்பதால், கல்வித் தகுதி மற்ற தகுதிகள் இல்லாதவர்கள் உடனடியாக நியமிக்கப்படுவதில்லை. தகுதியோடு இருந்து யாராவது நியமிக்கப்படவில்லை என்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது கவனிக்கப்படும்.

Time table for State Transport buses.

* 125 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state whether a booklet containing the latest time table of the State Transport will be published early indicating old and proposed new routes?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரிலும், மாவட்ட வழித் தடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் கால அட்டவணைகள், கட்டண அட்டவணைகள் அடங்கிய பேருந்து வழிகாட்டிப் புத்தகம் ஒன்றை வெளியிட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை கருதியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழகம் பூராவும் துரித பஸ்கள் போகின்றன. சில மாவட்டங்களில் டூரிஸத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று செய்யப்படுகிறது. இப்பொழுதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களும் துரித பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆறு வருஷத்திற்கு முன் ஒரு கையேடு வந்தது. ஆகவே, இப்பொழுது ஒரு கையேட்டை, இந்த மாதத்திற்குள்ளாவது வெளியிட முடியுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதன் அவசர அவசியத்தை அரசு உணருகிறது. அதே நேரத்தில், பல்வேறு பேருந்து வழித்தடங்கள் மாற்றி அமைக்கப்பட்டுவருகின்றன. நீண்ட தூரப் பேருந்துகளைச் சீர்திருத்தி அமைக்கப்படுவதால் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கிருந்து சேலம்

[1971 டிசம்பர் 6

சென்றால், அங்கிருந்து பங்களூர் போவதற்கு வசதியாக கால மாற்றங்கள் செய்து திருத்தி அமைக்கப்படுகின்றன. திருச்சியிலும், கோவையிலும், சேலத்திலும், மதுரையிலும் ஏற்கனவே இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னையிலே செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் காலதாமதம் சற்று ஏற்படுகிறது. ஆனாலும், எப்படியும் சரியான முறையில் தயாரிக்க வேண்டியுள்ள காரணத்தால், இப்பொழுது அவசரப்பட்டுக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், இரவு நேரத்தில் ஓடும் நீண்டதூர பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் இரவிலே சாப்பிடுவதற்கு வசதியாக பஸ்கள் நிறுத்தப்படுவதில்லை. ஆகவே, அதைப் பரிசிலனை செய்து அந்த அந்த வழித்தடங்களில், சாப்பிட வசதியாக நிறுத்தப்படுகிறதா என்பதையும் ஆலோசித்து அதற்கு வேண்டிய வகையில் ஆராய்ந்து செய்யவேண்டும். அதோடு, இரவு நேரத்தில் 400, 500 மைல் பிரயாணம் செய்யும்போது இப்பொழுது அமைத்திருக்கும் சீட்டுக்கள் வசதியாக இல்லை. அதையும் மாற்றி அமைக்க முடியுமா என்பதையும் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சா. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பயணிகள் பட்டினியாகப் போகவேண்டும் என்று இல்லை. எங்கேயாவது குறைகள் இருக்கலாம். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இரவில் வசதியாகப் பிரயாணம் செய்வதற்காக சொகுசு, 'குஷன்ட் ஸீட்ஸ்' அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அது இன்னும் ஒரு மாதத்திற்குள் எல்லாப் பேருந்துகளிலும் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. 4—12—1971 அன்று அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் எடுத்த முடிவுகள் படி இந்தக் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். அது ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடைபெறும்.

Now, the Hon. Member Thiru K. T. K. Thangamani will call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance.